செ.வெ.எண் : 08/ செப்டம்பர் நாள் : 03.09.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## கொரோனா தடுப்பு நடவடிக்கையாக 06.09.2021 அன்று அமாவாசை நாளில் அக்னி தீர்த்த கடற்கரை பகுதிக்கு செல்ல அனுமதி இல்லை என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்கனவே கொரோனா தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் கோவில்கள், ஆலயங்கள் மற்றும் மசூதிகள் வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வருகின்ற 06.09.2021 (திங்கள்) அன்று அமாவாசை நாளில் இராமேஸ்வரம் அக்னி தீர்த்த கடற்கரை பகுதிகளில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய பொதுமக்கள் கூடுவார்கள் என்பதாலும், திருக்கோவிலில் சாமி தரிசனம் செய்ய கூட்டம் அதிகமாகி, அதனால் கொரோனா தொற்று ஏற்படும் சூழ்நிலை உருவாக கூடும் என்பதால், 06.09.2021 திங்கள் கிழமை அன்று இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோவிலில் வழிபட மற்றும் அக்னி தீர்த்தக்கரை ஆகிய பகுதிகளில் பொதுமக்களுக்கு அனுமதி இல்லை என அறிவிக்கப்படுகிறது.

கொரோனா மூன்றாம் அலை பரவல் தடுக்கும் பொருட்டு மக்கள் அனைவரும் மாவட்ட நிர்வாகத்தின் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**